பக்கங்கள்: நான்கு

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 21 செவ்வாய்க்கிழமை (06-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 245

# புல்லாவெளி, குறிஞ்சாத்தீவில் நேற்று முழுவதும் கடும் சமர்!

## ஆனையிறவு படை முகாமை பலப்படுத்த ராணுவம் முயற்சி

கொழும்பு, ஆக. 6

ஆனையிறவு இராணுவ முகாமை வலுப்படுத்தி, விரிவுபடுத்துவதுடன், எதிர்காலத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதலைத் தடுக்க பிரதான முகாமைச் சுற்றி மேலும் பல சிறிய முகாம்களை இராணுவம் அமைக்கும்.

-இவ்வாறு கொழும்பு இராணுவ வட்டாரங்களை ஆதாரங் காட்டி இந்திய வானொலி நேற்று தெரிவித்தது:

இதற்கிடையில்—

ஆனையிறவு வெற்றியைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகளின் கோட்டை எனக் கருதப்படும் யாழ்ப்பாணம் வரை அடுத்த கட்டத் தாக்குதலை நடத்தப் போவதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க கூறினார் என்று வெரித்தாஸ்வானொலி நேற்று அறிவித்தது. [உ-எ]

## புல்லாவெளித் தாக்குதலில் 21 வேங்கைகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 6

புல்லாவெளிச் சந்திப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று விடிகாலை நடத்திய அதிரடித் தாக்குதல்களின் போது 21 வேங்கைகள் களப்பலியானதாகத் தெரியவருகிறது:

படையினர் தரப்பில் எண்ணிக்கை குறிப்பிடப்படாத அளவு சிப்பாய்கள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## ஆனையிறவில் மழை!

யாழ்ப்பாணம், ஆக. 6

கடும் சண்டை இடம்பெற்று வரும் ஆனையிறவு, புல்லாவெளிப் பகுதிகளில் நேற்றுக் காலை 6. 30 மணி முதல் சுமார் ஒன்றரை மணி நேரம் கடும் மழை பெய்தது.

தொடர்ந்து மழை பெய்தால் ஆனையிறவுக்குப் பின்னால் உள்ள கடல்நீரேரியில்— இராணுவத்தினர் முகாமை நோக்கி முன்னேறிய பாதையில்— நீர் தேங்கி நிற்கும் நிலை ஏற்படும் எனக் கருதப்படுகிறது.

குடாநாட்டில் நேற்றுக் காலை பரவலாக பல இடங்களிலும் நீண்ட நாட்களின் பின் மழை பெய்தது. [உ]

## சிலாவத்துறையிலும் நேற்று புலிகள் - ரா்ணுவம் மோதல்

மன்னார் சிலாவத்துறை இராணுவ முகாமில் இருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்றுக் காலை கடும் மோதல் இடம்பெற்றதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

புலிகளின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத நிலையில் இராணுவம் பலத்த இழப்புகளுடன் பின்வாங்கியதா்கவும் —

பின்னர் முகாமிலிருந்து பலத்த ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-15]

## விபத்தில் பலி!

யா்ழ்ப்பா்ணம், கச்சேரி — நல்லூர் வீதியில் நேற்றுக் கா்லை 9-45 மணியளவில் விபத்தில் சிக்கி வழிப்போக்கர் ஒருவர் மரணமானரா்.

கச்சேரி — நல்லூர் வீதியைச்சேர்ந்த காசிப்பிள்ளை செல்வரெட்ணம் [57 வயது] என்பவரே இழந்தவர் ஆவாா.

இந்த விபத்தில் வேறு சிலர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-143)

## கலைஞரின் தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படுகிறதா?

### தமிழக அரசு மீது குற்றச்சாட்டு

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் தொலைபேசிப் பேச்சுக்களை ஒட்டுக் கேட்கும்படி தமிழக அரசு உத்தரவிட்டிருக்கின்றதாம்!

தி. மு. க. பேச்சாளர் ஆலடி அருணா நேற்று சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தமிழக அரசுக்கு எதிராக இந்தக் குற்றச்சாட்டை வெளியிட்டிருக்கிறார். [உ-எ]

## சிப்பாய்கள் பலர் உயிரிழப்பு 2 கவசவாகனங்கள் தகர்ப்பு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 6

ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு, புல்லாவெளிப் பகுதிகளில் நேற்று முன்தினம் ஆரம்பித்த கடும் சண்டை நேற்று இச்செய்தி அச்சுக்குப் போ்கும் வரை உக்கிரமாக தொடா்ந்து இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் பெரும் தாக்குதல்களினால் பல படையினர் உயிரிழந்தனர்; பெரும் எண்ணிக்கையானோர் படுகாயமடைந்தனர்; படையினரின் பல காவல் அரண்கள் நாசமாகின; இரு கவச வாகனங்கள் தகர்க்கப்பட்டன.

குறிஞ்சாத்தீவு, புல்லாவெளி ஆகிய இரு பகுதிகளிலும் ஸ்ரீலங்கா இராணுவம், விமானப்படை ஆகியவற்றின் இருமுனைத்தாக்குதல்களுக்கு முகம் கொடுத்து, புலிகள் சளைக்காது நேருக்கு நேர் மோதி வருவதாக யுத்தமுனைச் செய்திகள் தெரிவித்தன.

புல்லாவெளிச் சந்திக்கு அருகில் நிலைகொண்டிருந்த படையினர் மீது நேற்று அதிகாலை 4.45 மணியளவில் விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தினர்.

இந்தப் பகுதியில் மோதல்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இனி கடற்படை படகுகளை தாக்க புலிகள் முயல்வர்!

### பி. பி. ஸி. தகவல்

லண்டன், ஆக. 6

ஆனையிறவு இரா்ணுவ முகாமுக்குத் தேவையான உணவு மற்றும் ஆயுதங்களைக் கொண்டு வரும் கடற்படைப் படகுகளை விடுதலைப் புலிகள் இனித் தாக்க முயலுவார்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கப் பேச்சாளர் ஒருவரை மேற்கோள் காட்டி பி.பி.ஸி. இவ்வாறு அறிவித்தது.

ஆனையிறவு இராணுவ முகாமைப் படையினர் மீட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னரும் சண்டை இடம்பெற்று வருவதாகவும் பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் கிறிஸ்தோபர் மொறிஸ் நேற்று அறிவித்தார்.

ஆனையிறவுப் போர் இன்னும் முடிந்துவிடவில்லை என்று கருதவேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதா்வது;

ஆனையிறவு முகாமினுள் காயமடைந்த நிலையில் சிக்கியிருந்த படையினர் அனைவரும் வெளியேற்றப்பட்டு விட்டனர் என இராணுவப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

கடந்த ஞாயிறு தொடர்ந்தும் அப்பகுதியில் நேருக்கு நேர் கடும் சண்டை இடம்பெற்றது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அகதிகளைதிருப்பிஅழைக்க இந்தியா கோருகின்றது

சென்னை, ஆக. 6

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் விரைவாகத் தாயகம் திரும்ப நடவடிக்கை எடுக்கும்படி இலங்கை அரசாங்கத்தை இந்தியா கேட்டுள்ளது.

இத்தகவலை இந்திய மத்திய உள்துறை இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் சென்னையில் கடந்த ஞாயிறு செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

அகதிகளுக்கு பாதுகாப்பான சூழ்நிலையை அவர்கள் வாழ்ந்த இடங்களில் ஏற்படுத்துமாறும், இந்தியா இலங்கையை வலியுறுத்திக் கேட்டிருப்பதாகவும் இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் தெரிவித்தார்.

தமிழகத்தில் தங்கியுள்ள உண்மையான இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு புனர்வாழ்வுக்கான உதவிகளை இந்தியா தொடர்ந்து வழங்கும் என்றும் திரு. ஜேக்கப் சொன்னார். (இ-எ)

## கொழும்பில் திடீர், திடீரென சுற்றிவளைப்பு

கொழும்பு, ஆக. 6

கொழும்பில் தினமும் திடீர், திடீரென சுற்றிவளைப்புகளும் தேடுதல்களும் நடத்தப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதிகாலை வேளையிலும், இரவிலும் சுற்றிவளைப்பு, மற்றும் தேடுதல்கள் இடம்பெறுவதாகவும் இளைஞர்கள் கைது செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## தமிழகத்தில் இருந்து திரும்பும் அகதிகளை மன்னாரில் தங்க வைக்க அரசு ஏற்பா்டு

கொழும்பு, ஆக. 6

தமிழகத்தில் இருந்து திரும்பும் அகதிகளை மன்னாரில் ஐ. நா. அகதிகள் தூதரக மேற்பார்வையில் உள்ள முகாம்களில் தங்க வைக்க ஸ்ரீலங்கா அரசு ஏற்பாடு செய்து வருவதாக புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் பேசாலை, தாழ்வுபாடு பகுதிகளில்—ஐ. நா. அகதிகள் தூதரகத்தின் மேற்பார்வையின் கீழ் இயங்கி வரும் — அகதி முகாம்கள் இரண்டும் விஸ்தரிக்கப்பட்டு அங்கு தமிழகத்தில் இருந்து திரும்பி வரும் அகதிகள் தங்க வைக்கப்படுவர் என்றும் புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது. (ஒ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### ரைப்ரைட்டர்கள் தேவை

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. மற்றும் பழுதடைந்த உதிரிப் பாகங்களுக்கு உபயோகிக்கக் கூடிய தட்டச்சு இயந்திரங்களும் வாங்கப்படும். பியூடோ என்ரப்பிறைசஸ், 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யர்ழ்ப்பாணம். (சி-0277)

### மணப்பெண் தேவை

இந்து 37 வயது லக்கினத்தில் செவ்வாய் தோஷம் இல்லை. வியாபாரத்தை தொழிலாகக் கொண்டவருக்கும், 35 வயது குற்றம் இல்லாத ஜாதகம். ஐரோப்பிய நாடொன்றில் உத்தியோகம் பாாக்கும், விரைவில் நாடு திரும்பவுள்ளவருக்கும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணப்பெண்கள் தேவை. தொடர்பு: வி. இல. 338, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [17725]

### ஜோதிடம்

குரு சர்பம், பெரியோர் சாபம், பிதிர் சாபம், மாதுர் சாபம், நாகசாபம், தெய்வ சாபம், ஸ்திரீ சாபம், புருஷ சர்பம் முதலியவற்றால் உண்டான தரித்திரம் நீங்க, விவாகம் நடைபெற தீராத நோய் தீர சாதகத்துடன் நேரில் வரவும்: ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, நல்லூர். [17741]

### பயிற்சிப் பரீட்சை

O/L90,91 பரீட்சைகளுக்கான விஞ்ஞானம், கணிதம், தமிழ், சமூகக்கல்வி, வர்த்தகம், ஆங்கில பாடங்களுக்குரிய பகுதி I & II அடங்கிய மாதிரிவினாத் தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். அவற்றிற்கு விடை எழுதித் தந்தால் இலவசமாக விடைகளுடன் திருத்திக் கொடுக்கப்படும். Bond புத்தக நிறுவனம், 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4229]

### புலமைப்பரிசில் பரீட்சை (ஆண்டு-5)

புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சைக்குரிய மாதிரி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் காலை 7-00 மணி முதல் பெற்றுக் கொள்ளலாம். விடை எழுதித் தந்தால் இலவசமாக விடைகளுடன் திருத்திக் கொடுக்கப்படும். Bond புத்தக நிறுவனம் 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4228]

### புலமைப்பரிசில் பரீட்சை-91

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத் தாள்கள் கிழமை நாட்களில் பி. ப 4-00 — 6-00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்க: எலைற் கல்வி நிறுவனம், வண்ணை தபாலகம் முன்பாக, 99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [17739]

### போத்தல்கள் தேவை

ஜாம் போத்தல்கள், சோஸ் போத்தல்கள் (Jam Bottles, Sauce Bottles) ரூபா /3-இற்கு குறையாமல் கொள்வனவு செய்யப்படும். Tasteline Industries (pvt.) Ltd., 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (4227)

## குவைத்திடம் அபகரித்த

# 3,000 தங்கப் பாளங்களை ஈராக் திருப்பி கொடுக்கும்

ஆக்கிரமிப்புக் காலத்தில் ஈராக்கிய படைகளால் குவைத்தில் கொள்ளையிடப்பட்ட தங்கப்பாளங்களை திருப்பி குவைத் அரசிடம் ஒப்படைக்க ஈராக் அரசு முன் வந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அந்த தங்கப்பாளங்களை பொறுப்பேற்க குவைத் மத்திய வங்கியின் பிரதிநிதிகள் சவூதிஅரேபியாவில் உள்ள அரமா நகருக்கு சென்றுள்ளனர்.

இந்த அரமா நகர் ஈராக் எல்லை அருகில் உள்ளது,

50 கோடி டொலர் பெறுமதியான 3 ஆயிரம் தங்கப் பாளங்கள் ஈராக்கிய அரசினால் திருப்பி ஒப்படைக்கப்பட உள்ளன. (இ-ள)

### பலாலியிலும் சிகிச்சையாம்

ஆனையிறவு இராணுவ முகாமில் காயமடைந்த படையினரில் சிலர் வைத்திய சிகிச்சைக்காக பலாலி இராணுவ முகாமுக்கும் எடுத்துச் செல்லப்பட்டனர் என்றும் கொழும்புப் பத்திரிகை செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 16 — 11 — 1914

மறைவு: 16 — 08 — 1990

அமரர்

### பொன்னம்பலம் சண்முகநாதன்

(ஓய்வு பெற்ற ஓடிற்றர், இறைவரித் திணைக்களம்)

திதி: 06 — 08 — 1991

காலத்தின் கோலத்தில் கரைந்து விட்ட எம் தந்தையே!
காலந்தான் போனாலும் ஆறுமா எமதுள்ளம்
வையகத்தில் நாம் வாழ வழி வகுத்த நீங்கள்
வானத்தில் தெய்வமாக எமை வழி நடத்துவீர்களாக!
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

15, ஒட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம். (17468)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 26 — 09 — 1933

மறைவு 18 — 07 — 1990

### அமரர் சின்னப்பு கந்தசாமி

(சாமி பல்பொருள் களஞ்சியம், யாழ்ப்பாணம்)

திதி: 06 - 08 - 1991

அன்பினால் எம்மை அரவணைத்த எமது அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்து ஓராண்டாகியும் உங்கள் பாசத்தால் பதைபதைக்கிறோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

1/9, 2-ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம். [illegible]

**University of Jaffna.**

**REPEAT EXAMINATION-CERTIFICATE COURSE IN DATA PROCESSING AND B SIC LANGUAGE PROGRAMMING**

The above Examination will be Conducted in November 1991. The eligible repeat candidates are requested to complete and submit the examination entry forms to the Examination branch, University of Jaffna, before 15th September 1991.

Those who are applying for the DPBL 22 paper (Project Work) are requested to meet the Head / Computer Unit on or before 31st August 1991 to discuss about the arrangements for Project work. The exact dates of the examination will be notified later.

– REGISTRAR.

University of Jaffna.

[C-0330]

## ஓராண்டு நினைவஞ்சலி



### யசோதரன்
### (மணியம் கிருஷ்ணதாஸ்)

வீரமரணம்: 05 — 08 — 1990

**கப்டன் யசோதரன் நீ வாழ்கின்றாய்!**

மனோமணி ஏற்றி வைத்த!
மங்காத சுடர் விளக்கே!
மணியம் போற்றி அணைத்த!
மாண்புமிகு ஒளி விளக்கே!
திருமலை தந்த தவப்புதல்வா
வன்னி மண்ணில் வந்துதித்த மாவீரா
வந்தனர் உன்னோடு நவமணிகள்
எரிமலையாய் பொங்கிய வீர வேங்கைகள்
கப்டன் யசோதரனே நீ வாழ்கின்றாய்!

திருமலை உன் பிறப்பிடமாம்
வன்னி உன் வாழ்விடமாம்
யாழ். கோட்டை உன் உறைவிடமாம்
திருமலையில் தொடங்கிய உன் கல்வி
வன்னியில் வளமாக வளர்ந்தது
சூடுவெந்த புலத்திலும் பாவற்குளத்திலும்
உன்கல்வி பலபடி ஏறிட - வவுனியாவில்
உயர்கல்வி கற்கவே புகுந்த நீ
குடும்பத்தைக் காக்கவே கல்வியை நிறுத்தி
பாவற்குளத்தில் காங்கேசன் தொழிற்சாலை
வேலைத் தலத்திலும்
வன்னியில் வனபரிபாலன இலாகாவிலும்
பதவிகளை வகித்திட்டாய்!

ஆக்கிரமிப்பும் அதர்மமும் அடிசாய்ந்து வீழ்ந்திட
எண்பத்தி மூன்றில் நீ சமூகத் தொண்டனானாய்
சிங்கள அரசின் திட்டமிட்ட குடியேற்றம் கண்டு
நீ சீற்றம் கொண்டாய்
ஆதிக்க வெறியரின் அடக்கு முறையை ஒழித்திடவே
எண்பத்தி நாலில் நீ புலி வீரனானாய்
பாசறையில் பயிற்சி பெற்றாய்
மகளிர் படை அணிக்கும் வழிகாட்டியானாய்
இந்தியப் படையை விரட்டியடித்து
எதிரிகளை முறியடித்து
வவுனியா, முல்லை, கிளிநொச்சி,
கொக்காவில், மாங்குளம்
முற்றுகைக்கு முன் நின்றாய்
புலிக் கொடியுடனே யாழ். கோட்டையுள் நீ புகுந்தாய்
வரலாற்று நாயகனாய் இன்று நீ திகழ்கின்றாய்!

உன் அடிச்சுவட்டைப் பின்பற்றி
தங்கை யசோதாவும்
இயக்கத்தில் இணைந்து கொண்டாள்
மாவீரனாகியதால் நீ ஏந்திய
ஆயுதத்தையும் சீருடையையும் ஏற்பதற்கு
உணர்வுடனே முன் வந்த உன் தங்கை கிருஷ்ணா
அண்ணன் யசோ மனோ, தம்பி யசோ கணேஸ்
அனைவரையும் இயக்கத்தில் இணைத்தனர்
உன் பெற்றோர்
இது மட்டும் போதாதென்று இளையவர் மூவருமே
உன் வழியே வருவதற்கு விழி வைத்துள்ளனர்
அதுமட்டுமல்லாது பெற்றோரும் வந்துவிட்டார்
உன் பாதையிலே
பொங்கியது உன் குடும்பம் எரிமலையாய்
உன் இலட்சியம் நிறைவேறும் நிச்சயம்
கப்டன் யசோதரனே நீ வாழ்கின்றாய்!

திருமலை, வன்னி மக்கள்.

[சி-0329]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### உறுதி செய்யும் உத்தரவு

வடபகுதிக்குப் பொருள்களை எடுத்து வருவதற்கான அனுமதியை இனிமேல் புனர்வாழ்வு அமைச்சே வழங்கப் போகிறது.

இதுவரை காலமும்—கடந்த பதினைந்து மாதங்களாக — வடபகுதிக்கு எந்தெந்தப் பொருள்களை எடுத்து வரலாம்; எந்தெந்தப் பொருள்கள் தடைசெய்யப்பட்டவை என்பதை பாதுகாப்பு அமைச்சே முடிவு செய்து வந்தது.

அதாவது அரசாங்கத்தின் சிவில் நிர்வாகத்துக்குப் பொறுப்பான அரசாங்கப் பகுதிகளை விட இராணுவத்துக்கே இது விடயத்தில் மேலாண்மை வழங்கப்பட்டது. அதனால் சிவில் நிர்வாக அதிகாரிகள் விதந்துரைப்பதைக் கூட, படை அதிகாரிகள் நிராகரித்தோ அல்லது ரத்துச் செய்தோ வந்தார்கள்.

வடக்கு - கிழக்கு மக்களின் அத்தியாவசிய சேவைகளில் அரசாங்கம் அக்கறை உள்ளதாகக் காட்டிக் கொள்வதற்கென்று, விசேடமாக உருவாக்கப்பட்ட அத்தியாவசிய சேவைகள் நாயகம் (பகுதி அதிகாரிகள் கூட, முழுக்க முழுக்கக் கூட்டுப்படைத் தலைமை அலுவலக அதிகாரிகளின் தயவில் தங்கியிருக்க நேர்ந்தது.

வடபகுதிக்கு எந்தெந்தப் பொருள்களை எடுத்து வரக் கூடாது என்று தாங்களே நிர்ணயித்துவிட்டு, அவற்றை இரகசியமாக அனுமதித்து லஞ்சம் வாங்கி வந்தனர் படையினர். இது விடயத்தில் இராணுவத்தின் உயர் மட்டம் முதல் காவலுக்கு நிற்பவர் வரை வடக்கு வியாபாரிகளிடம் உழைத்துக் கொழுத்தனர்!

இராணுவத்தினரின் இந்த உழைப்பின் இரகசியம் ஜனாபதிக்கு மிகப் பிந்தியே எட்டியிருக்கிறது. 17 பேர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டதன் எதிரொலியாக, வடபகுதிக்கு எடுத்துவர அனுமதிக்கக் கூடிய பொருள்களை நிர்ணயிக்கும் பொறுப்பை புனர்வாழ்வு அமைச்சுக்கு மாற்றியிருக்கிறார் பிரேமதாசா!

வடபகுதி ஸ்ரீலங்காவைவிட வேறு தேசம். இங்கு வாழும் மக்கள்— தமிழர்கள்— இலங்கையர் அல்லர். இவ்வாறு அரசாங்கத்தினரும், ஜனாதிபதியும் கருதுகின்றனர். மக்களின் அன்றாடத் தேவைகளுக்குப் பயன்படும் 95 சதவீதமான பொருள்களும் தடைசெய்யப்பட்டிருப்பதன் அர்த்தமே அது தான். அதுவன்றி வேறென்ன?

தமிழ் மக்கள் மீது பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளும் விதத்திலேயே, உறுதிப்படுத்தும் வகையிலேயே, ஜனாதிபதி வழங்கிய பொறுப்பை மாற்றும் உத்தரவு அமைந்துள்ளது.

ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழ் மக்கள் மீது இராணுவ ஆக்கிரமிப்பு மட்டும் நடத்தவில்லை. அவர்கள் மீது பொருளாதாரத் தடையும் விதித்திருக்கிறது என்பதை இதிலிருந்து வெளி உலகம் புரிந்து கொள்ளட்டும். தமிழ்ப் பகுதிகளுக்குக் கப்பல்களில் உணவுப் பொருள்கள் அனுப்பப்படுவதாகக் கூறப்படுவது வெறும் பம்மாத்து என்பதை உணரட்டும்.

இராணுவ, பொருளாதார, மனித உரிமை மீறல் ஆகிய எல்லாத் திசைகளாலும் சிறுபான்மை இனம் ஒன்று அழிக்கப்படுவதையும், அவர்களின் பிரதேசம் சீரழிக்கப்படுவதையும் இன்னும் எத்தனை காலத்துக்கு வெளி உலகம் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறது? வாளாதிருந்து வேடிக்கை காணப் போகிறது?

## கோண்டாவிலில் நேற்று மக்கள் திரண்டு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஆக. 6

ஆனையிறவுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த ஒன்பது போராளிகளின் புகழுடல்கள் நேற்று கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

ஏராளமான மக்கள் அஞ்சலி செலுத்தியதை அடுத்து புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டன.

வீரமரணமடைந்த போராளிகள் வருமாறு:-

கவிதா [ஹெலன் தேவநாயகம் — இளவாலை], திரேசா [தீபச்செல்வி சிவபாதம் — திருகோணமலை], சகுந்தலா [மேரிஎமல்டா மரியஸ்தாஸ் — பண்டத்தரிப்பு], உதயன் [முருகேசு குமாரசாமி — மண்டூர்], தர்மிளா [கௌரிகனகு — உரும்பராய்], கேதீஸ் [சுப்பிரமணியம் விஜயதாசன் — சுழிபுரம்], நிசாந்தன் [இளையதம்பி பிரேம்சிறி — நல்லூர்], மதிவதனன் [தர்மலிங்கம் தனேஸ்வரன் — சங்கானை], சுதா [கந்தைய்யா இராசநாயகம் — மட்டக்களப்பு]. [ஒ-3-15]

### வெளி மாவட்டங்களிலிருந்து

## யாழ். மாவட்டத்துக்கு இடம் மாறும் ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், ஆக. 6

பிற மாவட்டங்களிலிருந்து கடந்த முதலாம் திகதி முதல் யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் பட்டியல் வடக்கு-கிழக்கு மாகாண சபையினால் வெளியிடப்பட்டுள்ளது.

இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களின் பெயர்களும் அவர்கள் வெளிமாவட்டத்தில் முன்னர் கடமையாற்றிய பாடசாலைகளும் வருமாறு:-

**கிளிநொச்சி மாவட்டம்**

திருமதி லோ. யோகராஜா (வேம்பொடுகேணி சி. சி. க. பா.), செல்வி வி. வியாகேசு (பரந்தன் இந்து ம. வி.), திருமதி க. கார்த்திகேசு (பளை ம. வி.), செல்வி ஜெ. மார்க்கண்டு (கனகாம்பிகைக்குளம் கனி. வித்தியாலயம்.)

**மன்னார் மாவட்டம்**

திருமதி ய. சிவபாதசக்தி (சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), திருமதி க. சுந்தரேசன் (புனித சவேரியார் பெ. ம. ம. வி.), திருமதி பி. ஆனந்தராசா (முருங்கன் ம. வி.), திருமதி வி.ஆர். ஞானப்பிரகாசம் (நானாட்டான் ம. வி.), திருமதி தேவவதனி நாகதேவன்(பத்திமா ம.வி.), திருமதி டி. ஆர். கிருஷ்ணமூர்த்தி (புனித சவேரியார் பெ. ம. ம. வி).

**திருமலை மாவட்டம்**

திரு. க. பேரானந்தம் (இ. கி. மி. இந்துக் கல்லூரி), செல்வி ப. ஆறுமுகம்பிள்ளை (ஆலங்கேணி விநாயகர் ம. வி.,

**வவுனியா மாவட்டம்**

திருமதி சா. அரியரட்ணம் (வவுனியா ம. வி.), [த]

## பயிலுநர் ஆசிரியர்களுக்கு பயிற்சி தர 4 நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 6

பயிலுநர் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க நான்கு பயிற்சி நிலையங்கள் ஞாயிறன்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, மருதனார்மடம்இராமநாதன் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றிலேயே இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் பயிற்சி நிலையத்தை கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். ஏனைய மூன்று இடங்களிலும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் பயிற்சி நிலையங்களை ஆரம்பித்து வைத்தனர். [உ-3]

### தெரிவுக்குழு தொடர்பாக

## அரசியல் கட்சிகளுடன் சபாநாயகர் சந்திப்பு

கொழும்பு, ஆக. 6

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்படவிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பாக சபாநாயகர் எம்.எச். முஹம்மது நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் பெறாத அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களுடன் பேச்சுகள் நடத்தி வருகிறார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கவேண்டும் என்று சுதந்திரக்கட்சி எம். பி. மங்கள முனசிங்கா சமர்ப்பித்துள்ள தனிநபர் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது அதனை எதிர்ப்பது இல்லை என்று ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது தெரிந்ததே.

### காவிரி நெருக்கடி:

## கர்நாடக அணைக்கட்டை தகர்க்கப் பயமுறுத்தல்

புதுடில்லி, ஆக. 6

காவிரிநீர் பங்கீடு பற்றிய தகராறு கர்நாடகம் மற்றும் தமிழகம் ஆகிய மாநிலங்களில் புதிய நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கர்நாடகத்தில் உள்ள பிரமாண்டமான கிருஷ்ணசாகர் அணைக்கட்டை இம் மாதம் 14ஆம் திகதிக்கு முன்னர் வெடி வைத்துத் தகர்க்கப் போவதாக மாநில அரசுக்கு இனந்தெரியாதோர் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர் என்றும்-

அதனைத் தொடர்ந்து அந்த அணைக்கட்டுக்கு பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கர்நாடக மாநிலத்தில் இருந்து மேலதிக நீர் தமிழகத்திற்கு கிடைக்கும் வரை தமிழகத்துக்கு விஜயம் செய்யும் மத்திய அமைச்சர்களுக்கு கறுப்புக் கொடி காட்டப் போவதாக தமிழக விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ளது. (இ-எ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஆக. 6

யாழ்.மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 10-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு. மூர்த்தியும் கலந்துரையாடலில் பங்கு பற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஆக. 6

சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்பட்டுவரும், சிறுவர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவில் (மல்லாகம் மகாவித்தியாலயத்தில்) நாளை புதன் கிழமையும், கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவில் எதிர்வரும் 10ஆம் திகதியும் ஆரம்பமாக உள்ளது. (ஒ-3)

## களப்பலியான வேங்கைகள்

வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுப் பகுதிகளிலும் ஆனையிறவு முகாம் முற்றுகைப் போரிலும் ஸ்ரீலங்காப் படையினருடன் இடம்பெற்ற மோதல்களில் கடந்த மாதம் 16 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் 104 விடுதலைப்புலிப் போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

இவர்களில் 50 பேரின் பெயர் விவரங்கள் நேற்றைய உதயனில் வெளிவந்தன.

மிகுதி 54 பேரின் பெயர் விவரங்கள் வருமாறு:-

51. வேல்விழி (கமலா இராசமாணிக்கம்) வல்வெட்டித்துறை, 52. நளா (லலிதாதேவி நடராசா) புங்குடுதீவு, 53. சுபத்திரா (புவனேஸ்வரி சுந்தர்) சாவகச்சேரி, 54. சூரியகலா (குமுதினி நடராசா) கரவெட்டி, 55. ரூபிகா (வினோதா வேலாயுதபிள்ளை) நெடுங்கேணி, 56. கஜந்தா (இந்திராணி மணியம்) கிளிநொச்சி, 57. ஜஸ்மின் (சத்தியமலர் சின்னத்தம்பி) கொடிகாமம், 58. அனுசா (ஜெசித்தா குமாரசாமி) ஏழாலை, 59. நிருபா (சதாசிவம் சறோஜினி) மட்டுநகர், 60. விக்கி (சின்னையா ராமஜெயம்) மட்டக்களப்பு.

61. அஜந்தன் (வேலு ஆனந்தன்) துணுக்காய், 62. நரேஸ் (ஆரோக்கியநாதர் எட்வேட்குணசூரியர்) பண்டத்தரிப்பு, 63. சந்திரன் (முருகேசு ராஜேஸ்கண்ணன்) மட்டக்களப்பு, 64. தாஸ் (செல்லப்பா குகேந்திரன்) கிளிநொச்சி, 65. முரளி (எட்வின சிறீ) மட்டக்களப்பு, 66. சிசில் (ராமையா பொன்னம்பலம்-ரஜேந்திரன்) முழங்காவில், 67. சிகானு (கதிரவேல் கருணேஸ்வரன்) பூநகரி, 68. மணாளன் (பியதாஸ் விஜயபால்) திருமலை, 69. ஆதவன் (சிவலிங்கம் சிவானந்தம்) மூதூர், 70. ஜெயா (யேசுதாஸ் கொணறியூட்) உயிலங்குளம்,

71. துரை (சிங்கராஜா மனோகர்) தம்பலகமம், 72. தமிழ்ச்செல்வன்(மாசிலாமணி நிறஞ்சன்) திருமலை, 73. காமன் (கனகலிங்கம் சுதேஸ்வரன்) திருமலை, 74 சசி (மாணிக்கராசா சிவகுமார்) திருமலை, 75. சதீஸ் (சு. புஸ்பராஜன்) கிண்ணியா, 76. லிங்கேஸ் (வன்னியசிங்கி ஐவன் ஜெயராஜ்) உப்புவெளி, 77. காந்தரூபன் (பிரான்சிஸ் நெல்சன்) திருமலை, 78. சுலோஜன் (சிற்சபை நிறஞ்சன்) தம்பலகமம், 79. கோபி (கந்தையா பேரின்பமூர்த்தி) வேலணை, 80, வண்டு (சுப்பிரமணியம் யோகேஸ்வரன்) தாளையடி.

81. யோகன் (சின்னத்துரை கண்ணன்) சுழிபுரம், 82. அல்பிரட் (சின்னத்துரை யோசப்கெனடி) ஊர்காற்றுறை, 83. நியாஸ் (செல்வரட்ணம் சங்கர்) சாவகச்சேரி, 84. ஜெமினி (ஜெயசிங்கம் மதியழகன்) சாவகச்சேரி, 85. செனித் (குமாரசாமி திருவேகரன்) ஏழாலை, 86. கர்ணன் (நவரட்ணம் கெல்லர் தவேந்திரன்) பருத்தித்துறை, 87. தயாளன் (சிவகுரு மோகனசுந்தரம்) ஓமந்தை, 88. அலிஸ்ரன் (தியாகராசா கிருஷ்ணபாலன்) அம்பாறை, 89. செந்தூரன் (கந்தையா நாகேந்திரன்) அம்பாறை, 90. விநாயகன் (சித்திரவேல் மோகன்) மட்டுநகர்.

91. குருபரன் (ஆறுமுகம் பாலையா) காரைநகர், 92. அகிலன் (வேலன் மோகனகிறீ) கைதடி, 93. ஜெயராமன் (சந்திரசேகரம் உதயகுமார்) கைதடி, 94, செபமாலை (அலெக்சான்ந்து றூபன்] மன்னார், 95. சோழன் (மாணிக்கராசா சிறீசங்கர்) கிண்ணியா. 96. நரேஷ் (சபாரட்ணம் சிவபாதம்) கரவெட்டி, 97. சுதன் (இராசரட்ணம் ஜீவகுமார்) பூவரசங்குளம், 98. உபாலி (இராசதுரை பிரபாகரன்] முத்தையன்கட்டு, 99. கணேஷ் (வைத்திலிங்கம் துரைவடிவேல்) தொண்டமனாறு, 100. கணன் (நாகமுத்து கலியுகவரதன்) தாளையடி.

101. அலெக்ஸ் (பூபாலசிங்கம் பவளகாந்தன்) பளை, 102. அன்பு (யாக்கோப் அல்வின் கோட்) ஆனைக்கோட்டை, 103. காஸ்ரோ (நடேசபிள்ளை சுதாகரன்) பரந்தன், 104. அசோக் (கதிர்காமநாதன் இரகுநாதன்) இயக்கச்சி.

## மந்திகையில் 'கரங்கள்' அமைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 6

போராளிகளின் மருத்துவப் பராமரிப்புச் சம்பந்தமாக ''கரங்கள் பொதுப் பணியகம்'' பருத்தித்துறை பிரதான வீதியில் மந்திகை அரசினா வைத்தியசாலைக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணியகத்தில் சகல தரப்பு பிரதிநிதிகளுக்குமான கலந்துரையாடல் கூட்டம் நாளை புதன்கிழமை மாலை 4. 00 மணிக்கு நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் சாரணர் இயக்கம், தமிழீழத் தேசிய ஆசிரியர் ஒன்றியம், போரூட், செஞ்சிலுவைச் சங்கம், தெங்கு பனம் பொருள் சங்க சமாசம், பல நோக்குக் கூட்றவுச் சங்க ஒன்றியம், மாணவர் இயக்கம், முறைசாராக் கல்விப் பிரிவு, தனியார் கல்வி நிறுவன ஒன்றியம், தனியார் பேரூந்து ஒன்றியம், கடற்றொழிலாளர் ஒன்றியம், வர்த்தகர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் ஒன்றியம், சனசமூக நிலையங்களின் ஒன்றியம் ஆகியவற்றின் வடமராட்சிப் பிரதிநிதிகளையும்-

வட்ட அவை, சிற்றூரவை ஆகியவற்றின் தலைவர்களையும் பங்குபற்றும்படி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வடமராட்சிப் பிரிவு கேட்டுள்ளது. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்கு எதிராக கர்நாடகத்திலும் கெடுபிடி

பெங்களூர். ஆக. 6
கர்நாடக மாநிலத்தில் ஈழத் தமிழர்கள் தங்கியிருப்பதைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்த மாநில அரசு உத்தேசித்துள்ளது.

முதலமைச்சர் பங்காரப்பா இதனை நேற்றுத் தெரிவித்தார்.

அண்மையில் பெங்களூரில் ஈழப் போராளிகள் சிலர் கைது செய்யப்பட்டனர். இதனால் ஈழத் தமிழர்களின் நடமாட்டத்தை முறைப்படுத்துவதும் அவர்கள் பற்றிய விவரங்களைப் பதிவு செய்வதும் அவசியமாகியுள்ளதாக திரு. பங்காரப்பா செய்தியாளர்களிடம் தெரிவித்தார். [இ-எ]

## அமிர். கொலை: ஒருவர் மீது வழக்குத் தாக்கல்

கொழும்பு, ஆக. 6
தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் கொலை செய்யப்பட்டது தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டுள்ளது.

அமிர்தலிங்கத்தைக் கொலை செய்வதற்குச் சதி செய்ததாக வின்சென்ட வில்லியம் மரியதாஸ் என்பவர் மீது பொலிஸார் மேல்நீதிமன்றத்தில் அண்மையில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தனர்.

1989 ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் திகதி நர்ரஹேறன்பிட்டி அன்டர்சன் மாடி வீட்டுத் திட்டத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட மரியதாஸ் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இவர் எலோக்ரோனிக் பொறியியலாளரும், ஆசிரியரும் ஆவார்.

கடந்த ஜூன் மாதம் 7ஆம் திகதி இவர் மீது கொலைச் சதிக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரை விளக்க மறியலில் வைக்க உத்தர விடப்பட்டது. [அ]

## இனி கடற்படை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப் புலிகளிடம் இருந்து அரசுப் படைகளுக்கு மேலும் எதிர்த் தாக்குதல் வரவில்லை என முன்னர் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது; அது அவசரப்பட்டுக் கூறப்பட்டதொன்றாகி விட்டது.

போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தை அரசுப் படையினர் தங்கள் ஆயுதவல்லமை மற்றும் படையினரின் அதிக எண்ணிக்கை ஆகியவற்றைக் கொண்டு கைப்பற்றினாலும், அப்பிரதேசத்தைத் தொடர்ந்து பாதுகாத்து வைத்திருக்க வேண்டிய இடங்கள் வாய்ப்புகள் அரசுப் படைக்கு சாதகமாக இல்லை என்று விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஒருவர் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

எட்டு மைல் தொலைவில் உள்ள வெற்றிலைக்கேணி கடல் முனையில் இருந்து ஆனையிறவு முகாமுக்கு அரசுப் படையினர் உணவு மற்றும் ஆயுதங்கள் கொண்டு போகும் பாதையைத் துண்டிக்கும் நடவடிக்கைகளை எடுப்பதிலேயே இனி போராளிகள் தங்கள் கவனத்தைச் செலுத்துவார்கள் என்றும் அந்தப் பேச்சாளர் கூறினார்.

அரசுப் படைகளின் கடற்படைப் படகுகளை விடுதலைப் புலிகள் இனித் தாக்க முயல்வார்கள் என்று இதன் மூலம் தெரியவருகிறது.

ஆனையிறவுப் போர் இன்னும் தொடரலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

—இப்படி பி. பி. ஸி. செய்தியாளர் தெரிவிக்கிறார். (உ-எ)

## ஹொண்டா காலமானார்

டோக்கியோ, ஆக. 6
ஹொண்டா மோட்டார் சைக்கிள் உற்பத்தி நிறுவன உரிமையாளர் திரு. ஹொண்டா நேற்று டோக்கியோவில் காலமானார். அவருக்கு வயது 84. (உ-எ)

## அகதிகள் இடம்மாற்றம்

சென்னை, ஆக. 6
கோவை மாவட்டத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் மண்டபம் முகாமுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]


## குருத்துவ சேவையில் பொன் விழா



### வண. லூயிஸ் யோசப் [O M. I.]

வண. லூயிஸ் யோசப் O.M.I. சுவாமியார் அவர்கள் [அமல உற்பவம்] தமது 50ஆவது குருத்துவ ஜுபிலி பூசையை யாழ் கொழும்புத்துறை சஞ்சூசையப்பர் ஆலயத்தில் 6-8-91 செவ்வாய்க்கிழமை காலை 8. 30 மணிக்கு பலிப்பூசை ஒப்புக்கொடுத்து அமைதியான முறையில் கொண்டாடுகிறார்.

அவரது முன்னைய பங்கு மக்கள் அவருக்காக வேண்டிக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

— மைக்கேல் அஞ்சலோ

குருநகர்,
யாழ்ப்பாணம்.
[17745]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமுட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] கத்தில் உள்ள அச்சகத்தில் 06 - 08 - 1991 இல் [illegible] வெளியிடப்பட்டது.

# கூட்டுப்படை அதிகாரிகள் மீது ஜனாதிபதி பிரேமா பாய்ச்சல்!

கொழும்பு. ஆக. 6
வடக்கு — கிழக்குப் பகுதிகளுக்கு பொருள்களை எடுத்துச் செல்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் விடயங்களைக் கையாண்ட கூட்டுப் படைத் தலைமையகத்தின் அதிகாரிகளுக்கும், மற்றும் படையினருக்கும் எதிராக கடும் வார்த்தைப் பிரயோகங்களை ஜனாதிபதி பிரேமதாஸா உபயோகித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் கடந்த சனியன்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே இந்த வார்த்தைப் பிரயோகங்களை அவர் பாவித்தார்.

திட்ட அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள், மாகாண முதலமைச்சர்கள், நகரசபைத் தலைவர்கள், பாதுகாப்பு அதிகாரிகள், அமைச்சுச் செயலாளர்கள் மற்றும் உயரதிகாரிகள் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றுகையில் ஜனாதிபதி கூறியதாவது:-

இங்கு தேசாபிமானம் பற்றிப் பேசும் பலர், எமக்கு எதிராகப் போராடுவோருக்கு வெற்றிலெறியர்கப்பொருள்களை அனுப்பி வந்திருக்கிறார்கள்.

இதற்காக அவர்கள் பெருமளவு லஞ்சம் பெற்றிருக்கிறார்கள். மிகக் குறைந்த லஞ்சமாக ஒரு லட்சம் ரூபா வரை பெறப்பட்டிருக்கிறது.

எமக்கு நல்ல முகத்தைக் காட்டிக் கொண்டு துரோகம் செய்தவர்கள் யார், யார் என்பது எமக்குத் தெரியும்.

வடக்கு - கிழக்குக்கு அனுப்பப்படும் உரம் யுத்தத்துக்கான உரமாக மாறக்கூடாது.

அங்கு எத்தகைய பொருள்களை அனுப்பலாம்; எதனை தடை செய்யலாம் என்பதை திட்டவட்டமாகத் தீர்மானித்து பகிரங்கப்படுத்த வேண்டும்.

அதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் விவகாரத்தில் யாராவது முக்கிய பொறுப்பை ஏற்க வேண்டும். புனர் நிர்மாண அமைச்சு அந்தப் பொறுப்பை ஏற்கலாம்.

பாதுகாப்பு அமைச்சு யுத்தத்தைக் கவனிக்கட்டும்

கண்டபடி அனுமதிப் பத்திரம் வழங்கினால் அது முழு நாட்டுக்குமே ஆபத்தாக முடியும்.

—என்று திரு. பிரேமதாஸா அங்கு தெரிவித்தார். [உ-3]

## இரத்த தானம்

யாழ்ப்பாணம், ஆக. 6
யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு நேற்று யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் 8 பேரும், பாஷையூர் பகுதியைச் சேர்ந்த பொது மக்கள் 8 பேரும் இரத்த தானம் வழங்கினர்.

நேற்று அதிக எண்ணிக்கையானோர் இரத்தம் வழங்க முன்வந்த போதிலும் தகுதியுடைய சிலரிடமே இரத்தம் பெறப்பட்டது. (ஒ-15)

## புல்லாவெளி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வெடித்ததை அடுத்து, அங்கு கடும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

விமானக் குண்டு வீச்சுக்கு மத்தியில் புலிகள் நடத்திய தாக்குதல்களில் இப்பகுதியில் படையினர் அமைத்திருந்த பல கர்வலரண்கள் தகர்க்கப் பட்டன. காவலரண்களில் இருந்த படையினா பலரும் உயிரிழந்தனர்.

இதேவேளை—

நேற்றுக் காலை 6 மணிககு ஆனையிறவு உப்பள முகாமில் இருந்து பரந்தன் பக்கமாகவும்—

தடை முகாமில் இருந்து குறிஞ்சாத்தீவுப் பக்கமாகவும் கவச வாகனங்கள் சகிதம் இராணுவ அணிகள் முன்னேற முற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் முயற்சியை முறியடிக்கும் வகையில் விடுதலைப் புலிகள் இராணுவத் தொடரை வழிமறித்து கடும் தாக்குதலைத் தொடுத்தனர். சண்டை நேற்று இரவு வரை தொடர்ந்தது.

படையினருக்கு உதவியாக கடும் விமானத் தாக்குதல்களும் இடம்பெற்றன.

இராணுவத்தினர் பெரும் எண்ணிக்கையான ஷெல்களை மழைபோல் பொழிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

படையினரின் கடும் தாக்குதல்களுக்கு மத்தியிலும் அவர்களை முன்னேற விடாது விடுதலைப் புலிகள் கடும் பதிலடி கொடுத்துக் கொண்டிருப்பதாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

குறிஞ்சாத்தீவுப் பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற தாக்குதல்களில் பவள் கவச வாகனம் ஒன்றும் மற்றொரு கவச வாகனமும் சேதமடைந்ததாகத் தெரிய வந்தது. [உ-15-3]

## குண்டு வீச்சு

தென்மராட்சி, ஆக. 6
கடந்த சனிக்கிழமை இரவு அவ்ரோ விமானம் பளை ரயில் நிலையத்திற்கு அண்மையிலும், வண்ணான் கேணிப் பகுதியிலும் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது.

குண்டு வீச்சில் பதினைந்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் முறிந்து நாசமாகின. [ஒ-117]


# மரண அறிவித்தல்கள்

## Dr. C. K. துரைரத்தினம்

(Retired Deputy Superintendent, Civil Medical Stores)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட Dr. C.K. துரைரத்தினம் கொழும்பில் 4-8-91 இல் காலமானார். இவர் மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும், பிறேம்குமார் [U. K.], ஜெயகுமார் [Australia], ராஜ்குமார், உதயகுமார் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சிவலிங்கம் [மந்திகை வைத்தியசாலை], வசந்தி, ரூபமூர்த்தி [யாழ். பல்கலைக்கழகம்] ஆகியோரின் சகோதரனும், சிவகாமி பஞ்சாட்சரசிவம் [சிமெந்துக் கூட்டுத்தாபனம்], ஸ்ரீதேவி, றோகினி, சிவலக்ஷ்மி, ஜெயலக்ஷ்மி, பிள்ளை, செல்வீந்திரா, காலஞ்சென்ற தம்பி, பொன்னையா, கந்தசாமி ஆகியோரின் மைத்துனரும், சுவிற்சலாந்திலுள்ள புஷ்பவதி, வாமனகணேஸ், சந்திரவதனா, மோகனராஜா, ராஜினி, ஜெயந்தராசா, தம்பிசேகர் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 6-8-91 இன்று C 3/8, அன்டர்சன் மாடியில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
[17740] க. பாலசுப்பிரமணியம்

## காசிப்பிள்ளை செல்வரெட்ணம்

திரு, கா. செல்வரெட்ணம் நேற்று அகால மரணமடைந்துவிட்டார்,

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி காசிப்பிள்ளை — காசிப்பிள்ளை செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும், திரு. கா. இராசரத்தினம், இரர்ஜேஸ்வரி, யோகரத்தினம், சகுந்தலர்தேவி (துபாய்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கு. நடரர்ஜன், ந. திருக்குமரன் (துபாய்), விஜயலஷ்மி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (6-8-91) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

101, கச்சேரி—நல்லூர் வீதி,
நல்லூர், தகவல்: கு. நடராஜன்
[17471]

## அந்தோனிப்பிள்ளை ரெட்ணசிங்கம் (சாம்பிள் மாஸ்டர்)

அந்தோனிப்பிள்ளை ரெட்ணசிங்கம் [சாம்பிள் மாஸ்டர்] காலமானார். அன்னார் மேரிமாகிறெற் [முத்தம்மா ஆசிரியை] அவர்களின் அன்புக் கணவரும், காலம்சென்ற யோசவ் - மரியம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலம்சென்ற அரசரெட்ணம், பொன்றோஸ், காலம்சென்ற பொன்மணி, காலம்சென்ற ஜெயமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிறிகாந்தா [லண்டன்], ரெட்ணகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகநாதன் [லண்டன்], சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், பியோனா, டீன், தர்ஷன், றஜீவ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 6ஆம் திகதி மாலை 4 மணிக்கு இல. 15, சந்தானமாதா கோவில் ஒழுங்கையில் உள்ள இல்லத்திலிருந்து கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : ரெட்ணகுமார் (மகன்)
சந்தானமாதா கோவில் ஒழுங்கை. [17472]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org